

சிவகங்கை மாவட்டம் காரைக்குடியில் கவியரசர் கண்ணதாசனின் 99வது பிறந்த நாளை முன்னிட்டு அவரது திருவுருவச் சிலைக்கு கூட்டுறவுத் துறை அமைச்சர் கே ஆர்.பெரியகருப்பன் மலர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். உடன் முன்னாள் அமைச்சர் மு.தென்னவன், மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் நாகனி செந்தில்குமார், எஸ்.மாங்குடி எம்.எல்.ஏ, பொதுக் குழு உறுப்பினர் பள்ளத்தூர் கே.எஸ்.ரவி, கல்லல் கிழக்கு ஒன்றிய கழக செயலாளர் நா.நெடுஞ்செழியன், மாவட்ட மகளிர் தொண்டரணி அமைப்பாளர் திருமதி ஹேமலதா செந்தில் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

### திருவண்ணாமலை மாநகர மேயர் நிர்மலாவேல்மாறன் -

# மாநகரச் செயலாளர் ப.கார்த்திவேல்மாறன் இல்ல மணவிழா!

## அமைச்சர் எ.வ.வேலு வாழ்த்து!

திருவண்ணாமலை, ஜூன்-25-

திருவண்ணாமலை மாநகர மேயர் நிர்மலா வேல்மாறன், மாநகரச் செயலாளர் ப.கார்த்திவேல்மாறன் இல்ல மண விழா நடைபெறவுள்ளது. மணவிழாவினை தலைமையேற்று, பொதுப் பணி மற்றும் நெடுஞ்சாலைத்துறை அமைச்சர் எ.வ.வேலு நடத்தி வைக்கிறார். மாவட்ட நிர்வாகிகள், கழக முன்னோடிகள், சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்கள் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்துகின்றனர்.

02.07.2025 புதன்கிழமை, காலை 7மணிக்கு திருவண்ணாமலை,தண்டராம்பட்டு சாலை, மாதவிபன்னீர் செல்வம் மகாலில், திருவண்ணா மலை மாநகர மேயர் நிர்மலாவேல்மாறன், மாநகரச் செயலாளர் ப.கார்த்திவேல்மாறன் ஆகியோரின் மகள் வே.ஷாலினி, காஞ்சிபுரம் எஸ்.என்.சதாசிவம் (எ) சிவா - சுபூலா ஆகியோரின் மகன் எஸ்.விக்னேஷ் ஆகியோருக்கு மணவிழா நடைபெறவுள்ளது.

மண விழாவிற்கு கழக தணிக்கைக் குழு உறுப்பினரும், சட்டப்பேரவை துணைத் தலைவர்வருமான கு.பிச்சாண்டி, வடக்கு மாவட்டச் செயலாளர் எம்.எஸ்.தரணிவேந்தன், கழக மருத்துவ அணி துணைத் தலைவர் டாக்டர் எ.வ.வே.கம்பன், நாடாளுமன்ற உறுப்பினர் சி.என்.அண்ணாதுரை, தலைமைச் செயற்குழு உறுப்பினர் இரா.ஸ்ரீதரன், சட்டமன்ற உறுப்பினர்கள் செங்கம் மு.பெ.கிரி, கலசப்பாக்கம் பெ.சு.தி.சரவணன், வந்தவாசி எஸ்.அம்பேத்குமார், செய்யாறு ஒ.ஜோதி ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

மாநகரச் செயலாளர் ப.கார்த்திவேல்மாறன் அனைவரையும் வரவேற்றுப் பேசுகிறார்.

மணவிழாவிற்கு தலைமையேற்று பொதுப்பணி மற்றும் நெடுஞ்சாலைத் துறை அமைச்சரும், கழக உயர்நிலை செயல்திட்டக் குழு உறுப்பினருமான எ.வ.வேலு அவர்கள் மண விழாவினை நடத்தி வைத்து, மண மக்களை வாழ்த்தி பேசுகிறார்.

மண விழாவில் அவைத் தலைவர் கோ.கண்ணன், வடக்கு மாவட்ட அவைத் தலைவர் ஆர்.ராஜசேகர், மாநில பொறியாளர் அணி செயலாளர் கு.கருணாநிதி, தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் பொன்.முத்து, ஆர்.சிவானந்தம், கே.ஆர்.சீதாபதி, கே.வி.ராஜ்குமார், ஆர்.வேல்முருகன், மாநில விவசாய தொழிலாளர் அணி துணை செயலாளர் வ.அன்பழகன், மாவட்ட பொருளாளர்கள் எஸ்.பன்னீர்செல்வம், டி.ஏ.தட்சணா மூர்த்தி,

மாவட்ட துணை செயலாளர்கள் ந.பாண்டுரங்கன், ப்ரியா ப.விஜயரங்கன், க.லோகநாதன், விஜய லட்சுமிரமேஷ், ஜெயராணிரவி, மாநில தொ.மு.ச., துணைத் தலைவர் க.சௌந்தரராசன், கழக செய்தித்தொடர்பு இணை செயலாளர் சிவ.ஜெயராஜ், மாநகர துணை மேயர் சு.ராஜாங்கம், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் கே.வி.சேகரன், கோ.எதிரொலிமணியன்,

மாநகர பிரமுகர்கள் இலக்கிய தென்றல் ப.கண்ணன், தொழிலதிபர் எம்.இ.ஜமாலுதீன், கே.வி.மனோகரன், இரா.ஜீவானந்தம், வ.தனுசு, டி.வி.எஸ்.ராஜாராம், கோ.புகழேந்தி, அ.அருள்குமரன், டி.வி.கஜேந்திரன், சு.நரசிம்மன், இர.செல்வராஜ், எஸ்.கார்த்தி, ஏ.முரளி,

தெற்கு, வடக்கு மாவட்ட அணி அமைப்பாளர்கள் டி.வி.எம்.நேரு, காலேஜ் கு.ரவி, ஜெ.மெய்கண்டன், ஏ.ஏ.ஆறுமுகம், ப.அண்ணாமலை, மங்கலம் பிரபாகரன், பொன்.தனுசு, எச்.சாதிக்பாட்சா, கு.கணேஷ், சி.ராம்காந்த், பச்சையம்மன் எஸ்.முத்து, இரா.கார்த்திகேயன், டாக்டர்.பிரவீன்ஸ்ரீதரன், சி.பி.பாலமுரளிகிருஷ்ணா, ஏ.டபள்யு.சர்தார் காசிம், எஸ்.டி.ஆர்.எஸ்.பாபு, பி.கே.ஏ.அருண், எல்.ஐ.சி.து.வேலு, கற்பகம்சரவணன், உ.நித்யா, தொ.மு.ச. கவுன்சில் செயலாளர் இரா.ஆறுமுகம்,

வடக்கு மாவட்டம் எவரெஸ்ட் ந.நரேஷ்குமார், இ.எஸ்.டி.கார்த்திகேயன், ஏ.என்.சம்பத், என்.கே.ஏ.பாபு, அ.மணி கண்டன், மா.ஏழுமலை, தொ.ப.சீ.மதிவாணன், பி.செல்வராஜன், சாது.ஆனந்த், க.சீனுவாசன், ஜி.பி.அசோக், டாக்டர் மகேந்திரன், இ.மணி கண்டன், மாலினிவினோத் திவாகரன், ஐ.எஸ்.அமானுல்லா, ஆர்.ராம்ரவி, ப.க.மணிவண்ணன், அமர் (எ) இப்ராஹிம் ஷெரீப், அப்சல்பாஷா, கே.ஏ.புஷ்பராஜ், பி.எஸ்.சாந்தகுமார், இராணிவெங்கடேசன்,

வடக்கு மாவட்ட நகர செயலாளர்கள் ஏ.சி.மணி, கே.விஸ்வநாதன், ஏ.தயாளன், தெற்கு மாவட்ட ஒன்றிய செயலாளர்கள் அ.சிவக்குமார், மு.பன்னீர்செல்வம், வி.பி.அண்ணாமலை, ஆராஞ்சி.ஆறுமுகம், சி.சுந்தரபாண்டியன், மெய்யூர்.சந்திரன், த.ரமணன், பெ.கோவிந்தன், ப.கேசவன், கோ.ரமேஷ், சி.மாரிமுத்து, எஸ்.சிவசேமன், க.சுப்பிரமணி, இரா.ராஜேந்திரன், ஆர்.வி.சேகர், கி.ஆறுமுகம், பா.ராம ஜெயம், த.செந்தில்குமார், அ.ஏழுமலை, த.மனோகரன்,

வடக்கு மாவட்ட ஒன்றிய செயலாளர்கள் அ.சுப்பிரமணியன், பி.மனோகரன், ஏ.எழில்மாறன், கே.டி.ராமசாமி, என்.டி.மனோகரன், எஸ்.எஸ்.அன்பழகன், எம்.சுந்தர், எஸ்.மோகன், துரை.மாமது, ஏ.ஞானவேல், என்.சங்கர், எம்.தினகரன், ஜெ.கே.சீனுவாசன், ஏ.ஜி.திராவிடமுருகன், எஸ்.ரவிக்குமார், டி.ராதா, ப.இளங்கோவன், ஏ.சுந்தரேசன், கே.பி.ஆர்.பி.பழனி, சி.ஆர்.பெருமாள்,


தெற்கு மாவட்ட பொதுக்குழு உறுப்பினர்கள் நா.பழனி, அ.தண்டபாணி, க.பிரபாகரன், டி.கென்னடி, கு.பாலசுப்பிரமணி, கா.சு.இளங்கோவன், அன்பரசிராஜசேகரன் வடக்கு மாவட்ட பொதுக் குழு உறுப்பினர்கள்

ஏ.சி.வி.தயாநிதி, ஏ.எம்.காசி, எம்.கிருஷ்ணமூர்த்தி, வெள்ளைகணேசன், ஆர்.வெங்கடேஷ்பாபு, ஆ.மோகனவேல், ஆர்.நந்தகுமார், அப்சர்லியாகத் பாஷா,

திருவண்ணாமலை மாநகர பகுதி செயலாளர்கள் சு.விஜி (எ) விஜயராஜ், அ.கோவிந்தன், ந.சீனுவாசன், குட்டி க.புகழேந்தி, சி.எஸ்.சண்முகம், பா.ஷெரீப்,

தெற்கு, வடக்கு மாவட்ட பேரூர் செயலாளர்கள் சி.கே.அன்பு, ப.முருகையன், மு.அன்பழகன், எம்.சீனுவாசன், கோ.தனசேகர், ஆர்.முருகன், வி.வெங்கடேசன், டி.கே.மோகன், கே.கோவ ர்தனன், வேணிஏழுமலை மற்றும் நகராட்சி தலைவர்கள் எச்.ஜலால் மற்றும் திருவண்ணாமலை நகர நிர்வாகிகள் மு.கருணாமூர்த்தி, வட்டி அருணாச்சலம், ஜீவரேகா விஜயராஜ், இல.குண சேகரன், அ.கண்ணன், கோல்டு.எஸ்.பிரபு, ஹக்கிம்சேட், பேரூராட்சித் தலைவர்கள் கோ.சரவணன், கௌரிநடராஜ், எச்.சாதிக்பாஷா, செல்வபாரதிமனோஜ்குமார், கே.டி.ஆர்.பழனி, ராணி சண்முகம், சுதாமுருகன், வேணிஏழுமலை, இராதாஜெகவீரப்பாண்டியன், மகாலட்சுமிகோவர்த்தனன் மற்றும் எஸ்.கண்ணதாசன், கோ.ராஜசேகர், எம்.ரமேஷ், டி.திலீப்குமார், எஸ்.சதீஷ்குமார் உட்பட மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர், கிளைக் கழக, வட்ட கழக நிர்வாகிகள், உள்ளாட்சி அமைப்பின் பிரதிநிதிகள், கழக முன்னோடிகள் உட்பட பலர் கலந்து கொள்கின்றனர்.

நிறைவாக மாவட்ட துணை அமைப்பாளர் டி.என்.பி.வினோத்குமார் நன்றி கூறுகிறார். முன்னதாக *01.07.2025* மாலை *7.00*மணிக்கு மணமக்கள் வரவேற்பு நடைபெறவுள்ளது.



தேனி வடக்கு மாவட்டம் பெரியகுளம் வடக்கு ஒன்றியம் இளைஞரணி சார்பாக முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் பிறந்த நாள் மற்றும் நாடு போற்றும் நான்காண்டு திராவிட மாடல் சாதனை விளக்க தெருமுனை பிரச்சார கூட்டம் ஜி கல்லுப்பட்டி கலைஞர் திடலில் பெரியகுளம் வடக்கு ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர் திராவிடன் தலைமையில் நடைபெற்றது. பெரியகுளம் வடக்கு ஒன்றிய செயலாளர் எல்.எம். பாண்டியன், வடக்கு மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் ஆஷிப் கான், தெய்வேந்திரன், ராமகிருஷ்ணன், ரவி, ஆகியோர் முன்னிலை வகித்தனர். வடக்கு மாவட்ட செயலாளர் தங்க தமிழ்செல்வன் எம்.பி, சிறப்புரையாற்றினார். நிகழ்ச்சியில் சரவணகுமார் எம்.எல்.ஏ வடக்கு ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர்கள் மற்றும் கழக மூத்த முன்னோடிகள் கலந்து கொண்டனர்.

# எ(ஏ)ன் தலைவர்

# முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் எனும் சரித்திர நாயகர்!

**2012** ஆம் ஆண்டு ஒரு கோடை காலத்தில் சேலத்தில் ஒரு நிகழ்ச்சியில் பேசிவிட்டு சென்னை திரும்பிக் கொண்டிருந்தபோது தெரியாத எண்ணிலிருந்து ஒரு அழைப்பு. “வணக்கங்க... நான் ஸ்டாலின் பேசறேன். தலைவரோட நெஞ்சுக்கு நீதி ஐந்தாம் பாகம் வெளியீட்டு விழா நடக்க இருக்கிறது. நீங்க அதுல கலந்துகிட்டு பேசணும்னு விரும்பறோம்”





எனக்கு வார்த்தை வரவில்லை. ‘ வருகிறேன்' என்ற சொல்லைத் தவிர வார்த்தைகள் இல்லை. ஆனால் எனக்குத் தெரியாது அந்த அழைப்பு என் வாழ்வின் பாதையை மாற்ற போகும் அழைப்பு என்று. என் காலத்தின் ஒரு மகத்தான மனிதரின் நிழலில் நான் தொடர போகும் பயணத்தின் தொடக்கப்புள்ளி என்று. எனது முதல் அரசியல் உரை கலைஞரின் முன் நிகழ்ந்தது. அந்த உரை அனைவரையும் கவர்ந்தது. தலைஞர் என்ற அரசியல் ஆசானின் ஒளியில் இன்றைய முதல்வரை அன்று அரசியலில் என்னை வழி நடத்தும் தலைவராக ஏற்றேன்.

2008ல் ‘இந்தியா டுடே’ தலைவருக்காக ஒரு சிறப்பு மலரை வெளியிட்டது. அப்போது தி.மு.க.வின் எதிர்காலத் தலைவர் யார் என்ற குழப்பங்கள் விவாதிக்கப்பட்ட காலம். நான் அதில் ஒரு கட்டுரை எழுதியிருந்தேன். “ ஸ்டாலின் வேறு எவரையும் விட உறுதிமிக்க தலைவராக செயல்படுவார். அவரே இந்த இயக்கத்தை வழி நடத்துவார்” என்று. அதுவே நடந்தது.

**தலைவர் எந்த இடத்திலும் எவரையும் முந்திச் சென்றதில்லை. இயக்கத்தின் மாபெரும் தலைவரின் மகன் என்ற உரிமையையோ சலுகையையோ அவர் ஒரிடத்திலும் பெற்றுக்கொண்டதில்லை. அவருக்குப் பின்னால் இயக்கத்திற்கு வந்தவர்கள்கூட அவரைவிட உயர் பொறுப்புகளுக்கு வந்தபோதும்கூட அவர் பொறுமையாக இருந்தார். ஒவ்வொரு அடியாக எடுத்துவைத்தார். காலத்தின், அனுபவத்தின் உளிகளால் தன்னைச் செதுக்கிக்கொண்டார். மிக இளமையில் நெருக்கடி நிலைக்கால கொடுமைகளை சந்தித்து தன் அரசியல் வாழ்வைத் தொடங்கியவர் தி.மு.க.வின் முதுகெலும்பான இளைஞர் அணியை வலிமையுடன் கட்டமைத்து கழகத்தை எவரும் தகர்க்க முடியாத இரும்புக்கோட்டையாக்கினார். மேயராகவும் அமைச்சராகவும் அவர் பொறுப்பு வகித்த காலங்களில் அவர் முழுமையான தலைமைப்பண்பையும் செயலூக்கமுள்ள நிர்வாகத் திறனையும் வெளிப்படுத்தினார்.**

அவரை உருவாக்கியது அதிகாரமல்ல. அர்ப்பணிப்பும் உழைப்பும் மாறாத கொள்கைத் தீரமும்தான். அதுவே கழகத்தின் எண்ணற்ற இளைஞர்களுக்கு வழிகாட்டும் விளக்காக இருந்தது.

அவர் குழந்தைகளுக்கான ‘காலை உணவுத்திட்டத்தை’ அறிவித்தபோது என் மனம் மிகவும் உணர்ச்சி வசப்பட்டது. நூறாண்டுகளுக்கு முன்பு இதே சென்னையில்தான் இந்தியாவிலேயே முதல் முறையாக குழந்தைகளுக்கு மாநகராட்சிப் பள்ளிகளில் மதிய உணவுத்திட்டம் நீதிக்கட்சியால் தொடங்கப்பட்டது. அந்த இயக்கத்தின் அடிப்படை இலட்சியங்களின் வழிவந்த ஒரு இயக்கத்திலிருந்து நூறாண்டுகளுக்குப் பிறகு ஒரு தலைவன் எழுந்து வந்து அந்த இலட்சியத்தை உயர்த்திப் பிடிக்கும் வரலாறு இந்தியாவில் திராவிட இயக்கத்தைத் தவிர வேறு எந்த இயக்கத்திற்கேனும் உண்டா? இயக்கங்கள் திசை மாறிப்போயிருக்கின்றன. சிதைந்து போயிருக்கின்றன. அதன் அடித்தளக் தலைவர்கள் அந்த இலட்சியங்களை மறந்துபோயிருக்கின்றனர். ஆனால் நீதிக் கட்சி உருவாக்கிய சமூக நீதி, மாநில சுயாட்சிப் பாதையை பெரியாரும், பெரியாரைத் தொடர்ந்து அண்ணாவும், அண்ணாவைத் தொடர்ந்து கலைஞரும் பிரமாண்டமாக்கினார்கள். தலைவரோ ‘திராவிட மாடலே’ இந்தியாவின் மக்கள் நல அரசுக்கான சிறந்த மாடல் என்பதை இன்று நிறுவியிருக்கிறார். திராவிடம் என்பது எல்லோருக்கும் எல்லாமும் என்பதன் முழுமையான செயல்திட்டம் என்பதை இன்று ஒட்டுமொத்த இந்தியாவும் பார்த்துக்கொண்டிருக்கிறது.

தலைவரின் எத்தனையோ காட்சிகள் என் மனதில் ஆழமாக பதிந்திருக்கின்றன. ஆனால் என்றும் மங்காத காட்சி ஒன்று இருக்கிறது. அது கலைஞரின் மறைவின்போது அண்ணாவின் அருகில் அவர் துயில்கொள்ள அனுமதி மறுக்கப்பட்டபோது சட்ட போராட்டத்தில் வென்று அந்த உரிமையைப் பெற்ற போதுதலைவர்கண்ணீர்சிந்தியகாட்சிஎத்தனையோ கோடி மக்களின் கண்களில் அழிவற்ற தருணமாக மாறியது. அவர் தன் தந்தைக்காக அல்ல, தமிழ் மக்களின் உணர்வுகளுக்காக பெற்ற உரிமை அது.

தமிழகத்தை ஆண்ட எந்த தலைவர்களுக்கும் இல்லாத நெருக்கடிகளும் சவால்களும் இன்றைய முதல்வருக்கு இருக்கிறது. ஒன்றிய அரசு கவர்னர் வழியாக கொடுத்து வரும் இடைவிடாத தொல்லைகள், நிதி மறுப்புகள், அமலாக்கத்துறை வழியாக கொடுத்துவரும் அரசியல் மிரட்டல்கள், புதிய கல்விக்கொள்கை, இந்தித் திணிப்பு, கீழடி போன்ற தமிழர்களின் தொல் பண்பாட்டு மரபுசார் ஆய்வுகளுக்கு மறுப்பு என **எத்தனை நெருக்கடிகள் இருந்தாலும் தேர்தல் வாக்குறுதிகளுடன் அதற்கு அப்பாலும் பல புதிய திட்டங்களை நிறைவேற்றினார். மக்களைத் தேடி மருத்துவம், இல்லம் தேடிக் கல்வி, மகளிர் இலவசப் பேருந்து, இல்லத்தரசிகளுக்கு மாதம் 1000 ரூபாய் உரிமைத் தொகை, அரசுப் பள்ளி மாணவர்களுக்கும் மாணவிகளுக்கும் மாதம் 1000 ரூபாய், தொழில் வளர்ச்சியில் பெரும் பாய்ச்சல், நான் முதல்வன், தமிழ் வளர்ச்சிக்கான பல திட்டங்கள், மாவட்டம் தோறும் புத்தகக் கண்காட்சிகள், தமிழை உலகிற்கு கொண்டு செல்லும் முயற்சிகள் என தமிழகத்தின் மனித வளத்தையும் பண்பாட்டு வளத்தையும் செழுமைப்படுத்தி இந்தியாவிலேயே முதன்மையான மாநிலமாக்கும் பெரும் சாதனையை நிகழ்த்திக்கொண்டிருக்கிறார்.**



**மனுஷ்ய புத்திரன்**
எழுத்தாளர்

மாநில உரிமைகளுக்காக தலைவர் இன்று நடத்திகொண்டிருக்கும் பெரும் போராட்டங்கள் தமிழ்நாட்டைத் தாண்டி பெரும் தேசியத் தலைவராக அவரை உயர்த்தியிருக்கிறது. இந்தியா அவரது குரலைக் கேட்கிறது. பா.ஜ.க.வுக்கு மாற்றாக இந்தியாவின் பிரதமராகும் தகுதியுள்ளவர்கள் என ஒரு பட்டியலிட்டால் அதில் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலினின் பெயர் நிச்சயம் இருக்கிறது. இந்திய அரசியல் அமைப்பு வகுத்துத் தந்த கூட்டாட்சி தத்துவத்தின் முன்னணிப் போராளியாக அவரே திகழ்கிறார்.

நான் தி.மு.க.வில் கலைஞர் முன்பாக சேர்ந்த போது ‘ உங்கள் தகுதிக்கு ஒரு குறையும் வராமல் பார்த்துக்கொள்வோம்’ என்றார் கலைஞர். தலைவர் இன்றும் என்னை அவ்வாறு பார்த்துக்கொள்கிறார். தலைவரிடம் நான் எந்தப் பொறுப்பையும் பதவியையும் வாய்விட்டுக் கேட்டதில்லை. தந்தவை அனைத்தும் அவரே அறிந்து தந்தார். எனக்கு இருதய அறுவை சிகிச்சைக்கான அனைத்துப் பொறுப்பையும் அவரே ஏற்றுக்கொண்டபோது மருத்துவர்களிடம் அவர் கூறிய வாசகங்கள் இன்றும் நினைவில் இருக்கின்றன “எத்தகைய உயர் சிகிச்சை இருக்கிறதோ அதை அளியுங்கள். அவர் எங்களுக்கு மிகவும் முக்கியம்”

**வேறு எதையும்விட கட்சியே முக்கியம், கட்சியின் நலன்களே முக்கியம் என்பதை தலைவர் கற்றுத் தந்தார். அரசியலில் பொறுமையும் கண்ணியமும் இடையறாத போராட்டமும் எவ்வளவு முக்கியம் என்பதை அவர் கற்றுத் தந்தார். அனைவரையும் அரவணைக்கும் கனிவையும் கைவிட்டுவிடாத தந்தை யின் பேரன்பையும் நான் அவரிடம் எத்தனையோ சந்தர்ப்பங்களில் கண்டிருக்கிறேன்.**

**முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் என்பது பெயர் அல்ல. நம்பிக்கை. உறுதி. இந்த நூற்றாண்டில் தமிழ் நாட்டு அரசியலின் நிகரற்ற குரல். தலைவர் என்பதன் மெய்யான பொருள்.**

**நன்றி: ஜூனியர் விகடன்**
**25.6.2025**